## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 91

### யாத்திராகமம் 16-20 அதிகாரங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ↓→ 1 | | | | | | | | |
| | | 2 → | | | | | | |
| | 3 ↑ | | 4 ↓ | --→ | | --→ | | 5 ↓ |
| | 6 ↓ | | | | 7 ↓ | | 8 ↓ | |
| | | | | 9 ↑ | | | | |
| | | | | | | ←10 ↕ | | |
| | | 11 ↑ | | | | ←12 | | |
| | | 13 → | | | | | 14 ← | |
| | | | | 15 ↔ | | | ← 16 | 17 ↑ |

Book - Post

பெறுநர் : திரு/ திருமதி

↓↓↓

1. கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரட்தியட்சமாக ................. இறங்குவார். (9)
4. கர்த்தரை பரீட்சைப் பார்த்ததினிமித்தம் அந்த ஸ்தலம் ........... ................. என பெயர் பெற்றது. (2), (3)
5. கர்த்தர் தான் கார்மேகத்தில் உன்னிடம் வருவேன் என்று யாரிடம் சொன்னார்? (2)
6. ............................... என்னுடையது. (6)
7. சாயங்காலத்தில் வந்து விழுந்து பாளையத்தை மூடிக் கொண்டது எது? (2)
8. மீதியானின் ஆசாரியன். (4) 10. தலைக்கு ஒரு........ அளவு எடுத்துக் கொள்ளக் கடவன். (3)

→→→

1. ரெவிதீமிலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் பாளையமிறங்கிய இடம். (9)
2. ஆரோன் அதை ................யில் வைத்தான். (7)
13. மோசேயின் மகன்களில் ஒருவன். (5)
15. மோசேயோடு மலையுச்சிக்குச் சென்ற இருவரில் ஒருவன். (3)

↑↑↑

3. இஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு ........................ என்று பேரிட்டார்கள். (3)
9. அடிமைத்தன வீடு. (4) கடைசி எழுத்து →
10. எந்த நாளில் மன்னா உண்டாயிராது? (5) கடைசி எழுத்து →
11. மோசே கட்டிய பலி பீடம். (5)
17. வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்று கர்த்தர் யாரைக் குறிப்பிட்டார்? (5)

←←←

10. கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்ட இடம். (3)
12. இஸ்ரவேல் புத்திரருக்கு வனாந்தர திசையில் மேகத்தில் காணப்பட்டது. (3)
14. மோசேயின் கைகளைத் தாங்கிப் பிடித்தவர்களில் ஒருவன். (2)
15. கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கு .............. தலைமுறை கர்த்தர் இரக்கம் செய்வார். (4)
16. இஸ்ரவேலர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறுமுறுத்த இடம். (2)



SSA

THE SPROUTED STAFF OF AARON

# ஆரோனின் துளிர்த்த கோல்

வேதம் அறிவோம், தேவர்களாவோம்

மாத இதழ் : மார்ச் 2020

## பிலிப்பியர் 1: 21

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.




- தொடரும்

**அன்புடையீர், வணக்கம்.**

## உண்டெங்கில் தரும் இல்லெங்கில் சிருஷ்டிக்கும்...

*சமீபத்தில் நான் கேட்ட ஒரு சாட்சி என்னை அதிகமாய் அசைத்தது. நீர்க்கட்டியிருந்த காரணத்தால் கர்ப்பப்பை அகற்றப்பட்ட ஒரு பெண்மணி தவறாமல் தன் கணவருடன் ஆலயம் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். ஒரு நாள், ஆலயத்திற்கு வந்த பிரசங்கியார், "யேகோவா தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு, உண்டெங்கில் தரும் இல்லெங்கில் சிருஷ்டிக்கும்" என்று ஆணித்தரமாகக் கூறினார். இதைக் கேட்ட அப்பெண்ணுக்குள் விசுவாச விதை விழுந்தது.*

*ஒவ்வொரு நாளும்,"என் தேவன் உண்டெங்கில் தரும் இல்லெங்கில் சிருஷ்டிக்கும்" என்று மனதில் சொல்லிக்கொண்டே இருந்தாள். விசுவாசித்தவளே பாக்கியவதி. என்ன ஆச்சரியம், மருத்துவ விந்தை என்றுதான் சொல்கிறார்கள். அவர்களுடைய மருத்துவ அறிக்கையும் அதையே அறிவிக்கிறது. தேவன் கர்ப்பப்பையை சிருஷ்டித்து சாமுவேலைப்போல ஒரு ஆண்பிள்ளையை அப்பெண்ணுக்கு அருளினார்.*

*நமது தேவனுக்கு,"இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன்" என்று ஒரு பெயருண்டு (ரோமர் 4:17). இப்பெயரில் அவர் ஆதிப்பிதாவான ஆபிரகாமுக்கு வெளிப்பட்டு தமது வல்லமையை விளங்கப்பண்ணினார். சரீரம் செத்தவனென்று எண்ணப்பட்டவனிடத்திலிருந்து எண்ணற்ற ஜாதிகள் எழும்பி பூமியில் தூசியைப்போலவும் நட்சத்திரங்களைப்போலவும் நிரப்பினார்.*

*சாராளை நகைக்கச் செய்த தேவன்; அவர் சதாகாலமும் சர்வ வல்லவர். உன்னையும் நகைக்கச் செய்திடுவார். கண்களை அவர்மேல் பதித்து இரு. பாரங்களை அவரிடம் கொடுத்துவிடு. வாக்கு மாறாத தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக உண்டெங்கில் தரும் இல்லெங்கில் சிருஷ்டிக்கும்.*

*லெந்து காலத்திற்குள் பிரவேசிக்கும் நமக்கு தேவனோடு அதிகமாய் ஐக்கியப்பட இன்னும் ஒரு தருணம் கொடுக்கப்பட்டுள்ளதை நினைத்து மகிழுவோம். பழைய மனுஷனைக் களைந்துபோட்டு புதிய சிருஷ்டியாவோம். கிறிஸ்து இயேசுவையே தரித்துக்கொள்வோம். தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காக பஸ்கா பலியாக தந்தவர் இம்மைக்குறிய ஆசீர்வாதங்களால் நம்மை திருப்திப்படுத்துவது அதிக நிச்சயமல்லவா? (ரோமர் 8:32).*

*நாம் ஏதோ ஒன்றுக்காக ஏங்கிக்கொண்டிருப்போமானால் ஆண்டவர் நம்மைப்பார்த்து சொல்கிறார், "பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே நான் உன் தேவன்". நம்முடைய தேவனால் மட்டுமே இப்படிப்பட்ட ஆறுதலான, ஆசீர்வாதமான, ஆச்சரியமான உயிர்ப்பிக்கும் வார்த்தைகளைஉச்சரிக்க முடியும். ஆம்!தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இறங்குகிறதுபோல அவர் உண்டெங்கில் தருவார் இல்லெங்கில் சிருஷ்டிப்பார். அனுபவித்து ஆனந்தமடைவோம்; அநேகருக்கு அவர் நாமத்தை அறிவித்து அகமகிழ்வோம்.*

திருமதி. **எஸ்தர் இராபின்சன்,** சென்னை



## கடந்த மாத வேதவினா குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.

**I.** **1. பிரியா ஜெனிட்டா, 2. ஸ்டெல்லா ஜான்சன், 3. அனிதா பிரமிளா, 4. சாரா லின்சி கோல்டு, 5. ஜெனிட்டா, 6. கெத்சி செல்வா பாய், 7. ஹெப்சி பானுமதி, 8. ஷரன் ரூத்**

**II.** **1. பீட்டர் தாமஸ்** **I & II.** **1. P.D. கமலம்** **I & III.** **1. ஜெயசீலி ஜெயராஜ்**

**II & III.** **1. S. தனபாக்யம், 2. A.V. வர்ஜீனியா, 3. பியூலா காந்தி, 4. ஜான் அரசி, 5. ஜோன் பொன்முடி, 6. சோபியா ஜெரோம், 7. சுகந்தி ஜோன்ஸ், 8. காந்தா மனோகரன், 9. ரோப்பா கிறிஸ்டல், 10. R. ஜேனட், 11. சாந்தி குணா, 12. T. சுகந்தா, 13. வைலட் சாமிக்கண், 14. மாலின் சுரேஷ், 15. நகோமி சாம்சன், 16. தேவதாஸ் செல்வக்குமார், 17. G.T. ஜூலி, 18. ஜாய்ஸ் மணிமொழி, 19. வசந்தா செல்வராஜ், 20. அன்னமேரி ராஜ், 21. சின்னம்மாள் மேரி, 22. மத்தேயு மார்க், 23. ஏஞ்சலின் சிந்தியா, 24. J. புஷ்பராணி, 25. தனம் ஃ பான்சி, 26. ஹெப்சி அசரியா, 27. பியூலா ஜெயபிரகாஷ், 28. நான்சி ஆரோன், 29. நகோமி வில்சன், 30. ஹேமலதா ஜெயசந்தர், 31. I.டெய்சி, 32.L.நவநீதம், 33. சுதந்திரதேவி, 34. எஸ்தர் ராபின்சன் (திருச்சி), 35. K. அற்புதமணி, 36.வினோதியா பால்சன், 37. ஜெபவதி ராயப்பன், 38. சாலினி ஆனந்தராஜ், 39. V. கலாவதி, 40. ஜாய் சுகிர்தராஜ், 41. Sis. ஜூலியட், 42. ஜாய்ஸ் சுசிலா தேவி, 43. சாந்தகுமாரி செல்லையா, 44. குளோரி, 45. சோபியா, 46. ஏவாள், 47. மெர்சி இன்பராஜ், 48. செலின் சாந்தினி, 49. மனோன்மணி, 50. கிரேஸி பிரான்சிஸ்**

**III.** **1. ஜெயராணி ஜெயசீலன், 2. பெபல் ஜீவகி தாமஸ், 3. ஏஞ்சலின் பியூலா, 4. மாலா நெப்போலியன், 5. குணதிலகா யோனத்தான், 6. சகுந்தலா தனராஜ், 7. ராணி வில்சன், 8. G. எலிசபெத், 9. எஸ்தர் ஜெபராஜ், 10. ரூபி சகுந்தலா, 11. சித்ரா பாபு, 12. ஜெயசீலி செல்லையா, 13. தயா மனோகரன், 14. ஜான்சிராணி, 15. மியூரியல் ராபர்ட், 16. பீட்டர் தாமஸ், 17. டார்கஸ் சுகன்யா, 18. ஜான்சி பெனிடிக்ட், 19. சுபா வணக்கராஜ், 20. ஷீலா ஜான்சன், 21. சுகாசினி, 22. V. அனுசுயா, 23. S. சந்திரிகா, 24. J. ஜாஸ்மின், 25. P. லிபியா, 26. A. ஸ்டெல்லா, 27. S. ஜோசபின்**

**I, II & III:** **1. சூசன் சுமித்ரா, 2. ஜாய் ஜோசப், 3. மார்கிரேட் எலிசபெத், 4. ரூபல்லா அற்புதராஜ், 5. பிரேமா வில்சன், 6. ரெஜினா மேரி மனோகரன், 7. பாலின் மார்டீன், 8.ஐவி கலாவதி, 9. கிரேஸ் பிராங்கிளின், 10. ஜூலியா சார்லி, 11. ரோஸ்லின் திலகவதி, 12. மனோகரி பெஞ்சமின், 13. பிரேமலதா தியாகராஜன், 14. மல்லிகா எட்வின், 15. தேவகிருபா, 16. ரபேக்கா ஐசக், 17. அன்புக் கமலம், 18. ஷீலா பாலகுமார், 19. கிறிஸ்டினா பெஞ்சமின், 20. விமலா ரோசபெல், 21. பிரேமா வில்சன், 22. ஆஸிஸ் ஜோசியா, 23. சந்திரா இம்மானுவேல், 24. M. எலிசபெத், 25. ஷாலனி இம்மானுவேல், 26. ஜெயசீலி பால்ராஜ், 27. ஜோசப் அதிசயம், 28. திலகவதி அதிசயம், 29. மலர் செல்வி ரத்தினம், 30. ஜாகுலின் உஷா, 31. ருவல்யா அருள்பிரகாசம், 32. சாந்தி வில்லியம், 33. ஹெலன் சேசுராஜ், 34. ஜூலியட் கிருபாகரன், 35. நிர்மலா டேவிட், 36. பியூலா ஜேசுராஜன், 37. ஆனி கில்சன், 38. மோனிகாள் காந்திநாத், 39. செலைன் ராணி டேவிட், 40. செல்வராஜ், 41. ஜேனட் குணா, 42. ஜீவா செல்வராணி, 43. சுகந்தி ஹென்றி, 44. சுகுணா எலிசபெத், 45.J. மிராண்டா, 46. எஸ்தர் ராபின்சன், 47. ஓலிவியா லாங்டன், 48. மீரா பாண்டியன், 49.விமலா குழந்தைசாமி, 50. செல்வி மார்டீன், 51. ராணி சாந்தகுமார், 52. சோபனா பிரேம், 53. ரூபி காட்பிரே, 54. மல்லிகா ஜாய்ஸ், 55. குளோரி ஜார்ஜ், 56. ரெணி ரோசில்டா ஆலன், 57. ரூபி அகஸ்டின், 58. ராணி தனராஜ், 59. நகோமி எடிசன், 60. பிரேமா ஜெயராஜ், 61. ஜெயசீலி ரவிச்சந்திரன், 62. தேவகி ஜெயசிலன், 63. பியூலா நவமணி, 64. நான்சி தெபொராள், 65. ஏஞ்சலின் லின்சி, 66. இமெல்டா சுந்தர்சிங், 67. எஸ்தர் ஆலன், 68. கமலாஜார்ஜ், 69. கிறிஸ்டெபல் நிர்மலா, 70. சாந்தி ஜோயல், 71. ஜாஸ்மின் உஷாராணி, 72. எஸ்தர் ராஜேந்திரன், 73. ஜூலா கிரேஸ், 74. Dr. விஜயலலிதா. 75. வித்யா வில்சன்**

## II. வேதாகமப் புதிர் - 36

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | டு | க் | க | ம் | த | த் | யு | ன் | டு |
| எ | ல் | லை | க் | கு | ள் | னே | பே | வெ | யீ |
| த் | ரோ | ஈ | ன் | க் | கி | ப் | ர் | ற் | றை |
| ப | ய | சு | ரி | ற | டி | து | த் | றி | மு |
| ம் | கு | க் | டி | பி | ர | பு | க் | க | ள் |
| யா | தா | கோ | ய | ர | உ | ர் | ரி | க | னை |
| ரி | கா | த் | க | தா | த் | யா | லா | த | த |
| மி | ம் | லீ | ஏ | ன | மா | தி | நா | ழி | ரா |
| ம் | வ | து | த் | க | ம | ரா | ப் | பீ | ஆ |

**யாத்திராகமம் 13-16 அதிகாரங்கள்**

1. இவ்வேத பகுதியில் உள்ள 23 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 16 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் இஸ்ரவேலர் ஏலீமுக்கு வருவதற்கு முன் அவர்களுடன் கர்த்தர் செய்த உடன்படிக்கையின் சாரமான கடைசி வரி வெளிப்படும்.

### II. வேதாகமப் புதிர் - 35 விடை

**உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய். யாத் . 10:3**

## How Thankful are we?

During World war II many churches were kept open 24 hours a day so people could come and pray for loved ones on the battlefront. A caretaker in one of those churches noticed a boy who came in everyday to pray for about 10 minutes. After several weeks, the youngster came in and stayed on his knees much longer. When enquired by the caretaker the boy replied, “Each day I came here for a few minutes to ask God to bring my father home safely. This morning he did, so I hurried over here to thank the Lord for answering my prayer.”

**How Thankful are we? Remeber the verse Psalm 107:1**

பரிசு பெறுபவர்:

1. திரு. **மத்தேயு மாற்கு,** திருச்சி 2. திருமதி. **சோபியா ஜெரோம்,** மண்ணச்சநல்லூர் 3. செல்வி. **பிரியா ஜெனிட்டா,** சென்னை





2-ம் அதிகாரம் தொடர்கிறது...

**V) பவுலடியாரின் உடன் ஊழியர்கள் -** 2:19-30. பவுலின் இரண்டாவது நற்செய்தி பயணத்தில் அவரோடு ஊழியத்தில் ஈடுபட்ட தீமோத்தேயுவை 1. என்னைப் போல் மனதுள்ளவன், 2. கிறிஸ்துவுக்குரியவைகளைத் தேடுபவன், 3. தகப்பனுக்கு ஊழியம் செய்வதுபோல என்னுடன் பணியாற்றிய உத்தமசீலன் என மிகவும் பாராட்டி, அவனை உங்களிடம் அனுப்ப சித்தம் கொண்டேன்; அவன் எனது வழக்கு வியாஜியங்களை விவரிப்பான் என்கிறார். மேலும் ஆண்டவர் அருளால் நான் விரைவில் உங்களிடம் வருவேன் என்ற நம்பிக்கையைத் தெரிவிக்கிறார். அவரது நம்பிக்கையின்படியே விடுதலைப் பெற்று தொடர்ந்து ஊழியம் செய்தார்; பிற்காலத்தில் நீரோ மன்னனால் சிறைபிடிக்கப்பட்டு சிரைச்சேதம் செய்யப்பட்டார் என்று சரித்திர பாரம்பரியம் விளம்புகிறது.

அடுத்ததாக பிலிப்பு பட்டணத்தில் போதகராக பணியைத் தொடர்ந்த எப்பாப்பிராதீத்து பவுலின் நலனை விசாரிக்கவும், பிலிப்பியர் அளித்த சகாய பணத்தை கொடுப்பதற்காகவும் வருகை தந்த அவரைப் பற்றி 1. என் சகோதரன், 2. உடன் உழைப்பாளர், 3. தோள் கொடுத்த உடன் போர் வீரர், 4. உங்கள் ஸ்தானாபதி, 5. என் குறைச்சலுக்கு உதவினவர் என்ற நல்அறிக்கையிட்டு நமக்கும் அவரை அறிமுகப்படுத்துகிறார். ஊழியர்களுக்கிடையே இத்தகைய அன்பும், ஒற்றுமையும், பாராட்டும் அமைய நாம் ஜெபிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

கடின ஊழியத்தின் நிமித்தம் மரணத்திற்குச் சமீபமான சோர்வும், பெலவீனமுமடைந்த எப்பாப்பிராதீத்துவிற்கு ஆண்டவர் இரங்கினார். கர்த்தர் அவனை குணமாக்கினார். எனக்கு மகிழ்ச்சி; வருத்தமடைந்திருந்த உங்களைச் சந்திக்கவும் நீங்களும் சந்தோஷமடையவும் அவனை உங்களிடம் அனுப்புகிறேன்; அவனை கனம் பண்ணுங்கள் என்கிறார். இப்படிப்பட்ட உண்மை ஊழியர்களுக்காக ஜெபிப்பதிலும், அவர்களை கனம் பண்ணுவதிலும் நாம் முந்திக் கொள்ளுகிறோமா?

**VI) யூதமத மரபுக் கொள்கைக்காரர்** (Judaizers / Legalists) **மற்றும் உலக சிந்தனையுடைய பெருமைக்காரர்** (Antionmians/ Libertines) பற்றிய எச்சரிப்பு செய்திகள் - 3:1 - 4:1 யூத பாரம்பரியங்களையும், யூத மத சடங்குகளையும் வலியுறுத்தி சத்தியத்தைத் திரித்துக் கூறி சபை மக்களை திசை திருப்புவோரை பவுல் மிக ஆக்ரோஷமாக 1. நாய்கள், 2. பொல்லாத வேலையாட்கள், 3. தீமை செய்கிறவர்கள், 4. உறுப்பை சிதைக்கும் சுன்னத்துக்காரர் என சாடுகிறார். பரிசுத்த ஆவியானவர் இடைபட்டு ஒரு மனிதனுடைய பாவம், அவனுடைய தீய சிந்தை, கெட்ட செயல் ஆகியவற்றை வெட்டியெறிவதே விருத்தசேதனம்; இதுவே சத்தியம். (ரோ. 2:25-29, கொலோ 2:11)

4-6 வசனங்களில் பவுல் தனது அடிப்படையாகவும் ஆதாயமாயுமிருந்த

பாரம்பரியம், வளர்க்கப்பட்ட விதம், குலப்பெருமை,மரபு வழி உடைமை, அறநெறி வாழ்வு பற்றி உயர்வாக பேசுவது போல் இருந்தாலும், இவை எதுவும் எவ்வகையிலும் ஒரு மனிதனின் இரட்சிப்புக்கும், நித்திய வாழ்விற்கும் பயனளிக்காது என்றும் ஒருவரது செயல்பாட்டினால் அல்ல; கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவும் அவரிடம் கொள்ளும் ஐக்கியம் மட்டுமே தேவை என்றும் வலியுறுத்துகிறார். எனவே கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள லாபமாயிருந்தவற்றை நஷ்டமாக எண்ணுகிறேன் என்கிறார். மனிதனின் நீதிக்கும் இரட்சிப்புக்கும் உள்ள அடிப்படையான ஒரே விசுவாசம் கிறிஸ்துவின் தியாக மரணமும், அவர் சிந்திய இரத்தமும், உயிர்த்தெழுதலுமேயாகும். எனவே பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நோக்கி ஓடுவதாகவும், தனது வாழ்க்கை இலக்கு கிறிஸ்து இயேசுவிற்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளாக உள்ளது என்றும் கூறுகிறார்.

இவ்வித தீர்மானம் நமக்கு உண்டா? நம் உலகக் கவலைகளும், பிரச்சனைகளும் நம் கவனத்தை சிதறடிக்கின்றன. பற்பல சோதனைகள், கவலைகள், ஐஸ்வர்ய மயக்கம், தகாத ஆசைகள் போன்றவை நம்மைத் திணறடித்து நமது அர்ப்பணிப்பை நிலைகுலையச் செய்கின்றன. கிறிஸ்துவின் சிந்தைக்கொப்பான முழுமையைப் பெற, தேறினவர்களாய் வளர்ச்சியடைய நமது குறைவுகளை தேவன் வெளிப்படுத்துவதோடு சீர்ப்படுத்தும் ஆவியின் மூலம் ஒழுங்காயும், ஒரே சிந்தையாயும் இருக்க வலிமையை அருள்வார். இதற்கு நீங்கள் என்னை பின்பற்றுகிறவர்களாகுங்கள் என்று ஆலோசனை சொல்கிறார்.


பவுல் 3:18-21 வசனங்களில் உலக ஆதாயத்துக்கென்றும் மக்களால் புகழப்படுவதற்கென்றும் ஊழியம் செய்வோர் சிலுவைக்குப் பகைஞர் என்றும் பிறரது அடிப்படைத் தேவைகளை சிந்தியாமல் பெருமையுடன் தங்களுடைய ஆடம்பரத் தேவைகளையும், ஆசை இச்சைகளையும் பூர்த்தி செய்வதிலேயே கவனம் செலுத்துவோரின் முடிவு அழிவு என்றும் எச்சரிக்கிறார்.

கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்துக்கான குடிமக்களல்ல; அவர்கள் இவ்வுலகில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறார்கள். நம்முடைய குடியுரிமை பரலோகத்திலிருக்கிறது. ஒருநாள் கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து வருவார் (யோ. 14:2-3; 1 தெச. 4-16) அப்பொழுது நம்முடைய அற்பமான அழிவுக்கேதுவான சரீரத்தை மறுரூபப்படுத்துவார். எந்த அளவிற்கு? தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக (1 கொரி. 15 : 149, 51) மாற்றுவார். மேலும் இப்பொழுது உடல் மற்றும் உள்ளத்தின் வலிகளால் காயம்பட்டு போராடிக் கொண்டிருப்போருக்கும், உடல் குறைபாடுகள் பெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கும் அற்புதமான, பூரணமான, மகிமையான நிறைவு நிகழும். எனவே அவ்வித நித்திய ஜீவனையும், அழியாமையையும் அணிந்து கொள்ள ஆவலோடும் ஆயத்தத்தோடும் காத்திருப்போம், முடிவு பரியந்தம் கர்த்தருக்குள் நிலைத்திருப்போம்.

- தொடரும்



# I. READ AND RECOGNISE : 36




Read and Recognise, வேதாகமப் புதிர், வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில் அனைவரும் பங்கு பெறலாம். **25.03.2020**க்குள் விடை அனுப்பப்பட வேண்டும்.
குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.

பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்ளி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி - 620 008.

**97914 09192** என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக மத்தியில் எழுதி Whatsapp மூலம் அனுப்பலாம்.

## Guidelines :

a. Bible Portion : Luke 19 & 20 Chapters
b. All answers begin with the letter “S”
c. Letters can be used any number of times.
d. Give the reference.

**Questions :**

1. The ................. came .........., “Lord, your mina has made 5 minas”.
2. Zacchaeus was .............. to ................ who Jesus was
3. The ................. and the chief priest ............... to lay hands on him.
4. How can they ............... that the Christ is David’s ................?
5. Well done, good ....................
6. .......................... they watched him and ............. .............. who pretended to be ......................, that they might catch him in ................ he ...............
7. They will not leave one ................... upon another.
8. The ................ of Man came to ........... and to ........... the lost.
9. The tenants beat him and ................ him away empty handed.
10. There came to him ................ ................., those who deny that there is a resurrection.

**Answers : I. Read and Recognise : 35** (Luke 17 & 18)

**1. Whoever, will, whoever, will 17:33**
**2. was, widow, who 18:3**
**3. will, women 17:35**
**4. why, whom 17:1**
**5. would 18:13**
**6. Why 18:19**
**7. Were, where 17:17**
**8. we, written, will 18:31**
**9. What, want 18:41**
**10. Were, will**